கண்ணீர் அஞ்சலி



அமரர்

சோமசுந்தரம் சிறிநிவாசன்

பெருமை மிகுப்பரம்பரையில் பிறந்து வளர்ந்து
சொந்தங்களோடு சேர்ந்து வாழ நினைத்த
உம்மை ஏன் பிரிந்தோம்?
பேசுனும் வளமுடனும் சிறப்பாக வாழ்கின்றீர் என்றே நாம்
என்றும் பெருமைபேசி பெரிதுவந்து வந்தோம்
ஆருயிர்த் துணைவியை ஏன் தவிக்கவிட்டுப்பிரிந்தீர் அண்ணா?
ஆருஞ்சுற்றத்தாரும் சொந்தங்களும் சோகம் காப்பர் என்றோ?
பெருமான் சோமசுந்தரம் சிவகாமசுந்தரி அம்மாள்
தான்சேர்ந்தீரோ அண்ணா
என்றென்றும் உங்கள் நினைவுகளுடன் வாழ்வோம் அண்ணா

சோகத்துடன்...
கணேஷன், இராஜன்
இராஜநாயகம் குடும்பத்தினர்
இ.கேசவநாதன்
பிரணவராஜா குடும்பம்
திருமதி பி.கிருஷாந்தி
பி.சாருலதா,பி.ஸ்ரீபிரியா

இல்லத்தின் சுடர் அணைந்து 11ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர் லயன்

திரு.வே.தாமோதரம்பிள்ளை ஜே.பி.

இளைப்பாறிய தபால் அத்தியட்சகர்

மலர்வு:15.02.1923 உதிர்வு:11.02.1998

"ஆண்டவர் கொடுத்தார், ஆண்டவர் எடுத்துக் கொண்டார்
அவர் திருநாமம் மகிமைப்படுவதாக" (யோபு 1:21)

பத்து ஒரு ஆண்டுகள் பறந்து விட்டதடி
ஆண்டவன் அழைப்பை ஏற்று அவர் பாதம்
அலங்கரிக்க சென்று விட்டீங்க ஐயா
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உங்கள்
அன்பு நினைவுகள் எங்கள் உள்ளத்தை விட்டு அகலாது

காலத்தால் அழியாத நினைவில் உங்கள் அன்பு
மனைவி, மகன்மார்-மோகன்ராஜ், ரிரிதிராஜ்
குடும்பத்தினர், பாசமுள்ள உற்றார், உறவினர்

"ராணிஸ்ரான்"
புகையிரத நிலைய வீதி, மன்னார்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி ஜேன் எலிசபெத் கியூபேட்

மலர்வு:01.05.1945 உதிர்வு:12.01.2009

அன்பின்சிகரமாய், பண்பின் பாசத்தின் உறைவிடமாய் எம்முடன் வாழ்ந்த
அன்புத்தெய்வமே! எங்கள் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும் அம்மா!

கொழும்பைப்பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் ஊர்காவற்றுறை, சுருவில் வீதியை சொந்த இடமாகவும் கொண்டிருந்த எங்கள் அன்புத்தெய்வத்தை இழந்து துயருற்று இருந்த வேளையிலே உடன்வந்து ஆறுதல் கூறியோருக்கும், உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி, தந்தி மூலமாக இரங்கல் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையங்களை வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் பல வழியிலும் உதவி செய்தோருக்கும் மரணச்சடங்கில் கலந்து எமது துயரில் பங்கு கொண்ட அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக கீழ்க்காணும் தேவாலயங்களில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
12.02.2009 புனித லூசியாஸ் பேராலயம், கொழும்பு-13 மாலை 6.00 மணி
14.02.2009 புனித மரியாள் தேவாலயம், ஊர்காவற்றுறை காலை 6.30 மணி
14.02.2009 St Franziskus church,
vs schwennigen, Germany மாலை 4.00 மணி
15.02.2009 புனித சூசையப்பர் தேவாலயம்
172, Leslie st, Toronto, Canada மாலை 4.30 மணி

20-இசக்கிமுத்து பிளேஸ், பிக்கரிங்ஸ் வீதி, கொழும்பு-13
கணவன்:0112435035, றேமன்:00497720956885
கேமன்:07957209105 டெஸ்மன்:00442084233678
றுக்மன்:014162986185

கண்ணீர் அஞ்சலி

செல்வி தேவராஜா கஜேந்தினி

(தாதிய உத்தியோகத்தர்-கிளிநொச்சி பொது வைத்தியசாலை)

மலர்வு:16.05.1983 உதிர்வு:02.02.2009

பண்பும் பாசமும் இதயமதில் கொண்டு
பக்தியும் நேர்மையும் எண்ணமதில் கொண்டு
இன்முகம் தனையே உன்முகமாக்கிய எம் நண்பியே!
உன் இனிய சேவை உலகிற்கு தேவையென
கலிகால காலன் அறியாமல் போனான்
கடமை தவறாதவளே உன் கண்ணியமான...
நினைவுகளை மீட்டபடி நாமிங்கு...

கிளி/பொதுவைத்தியசாலை தாதிய உத்தியோகத்தரான செல்வி தேவராஜா கஜேந்தினி 02.02.2009 அன்று அகாலமரணமடைந்தார். அன்னாருக்கு எமது கண்ணீர்ப்பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

2004 "A" பிரிவு
தாதிய உத்தியோகத்தர்கள்

ஓம் நமோ நாராயணாய நமஹ

நன்றி நவிலல்



திரு. V.K.ராஜரட்ணம்

பிறப்பு13.07.1935 இறப்பு:16.01.2009

இறைபதமடைந்த எமது பாசமிகு தந்தையின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டும், நேரில் வந்தும் தொலைபேசி, தந்தி வழியாக அனுதாபங்களைப்பகிர்ந்து கொண்டும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக என்றென்றும் பிரார்த்திப்போமாக!
ஓம் நமோ நாராயணாய நமஹ

தகவல்:பாசமிகு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் மற்றும் உற்றார், உறவினர்கள்

31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் சங்கீத பூஷணம்

நாகம்மா கதிர்காமர்

அன்னை மடியில்:21.12.1932
இறைவன் அடியில்:07.01.2009

எமது சிறு பராயம் முதல் சங்கீத ஞானத்தையும்
அறிவையும் மிக்க அக்கறையுடன் ஊட்டிய தாயே!
எமக்கு சங்கீதத்துடன் நம் வாழ்க்கை வளம் பெற
கண்டிப்புடன் வழிகாட்டிய அன்னையின் உருவே!
எமது துக்கத்தையும் சந்தோஷத்தையும்
எமது குடும்பத்தில் ஒன்றாகப்பகிர்ந்த அன்பின் கடலே!

நீங்கள் எம்மை விட்டுச்சென்றாலும் எம்முள் ஏற்றிய சங்கீதஒளி இன்று எட்டுத்திக்கிலும் சுடர்விட்டுப்பிரகாசிக்கிறது. உங்களது சங்கீதம் என்றும் உங்கள் நினைவுடன் எம்முடன் வாழும்.

உங்கள் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
நன்மதிப்புக்கும் பேரன்பிற்குமுரிய
மாணவர்கள்
ரதன் & ரதி (பன்னாலை, தெல்லிப்பழை)

மரண அறிவித்தல்–கண்ணீர் அஞ்சலி

மலர்வு 12 04 1928

உதிர்வு 04 02 2009

அமரர் திருமதி நாகேஸ்வரி சிவசுந்தரம்

சாவகச்சேரி சங்கத்தானையை பிறப்பிடமாகவும், கொழும்பு, வத்தளை மற்றும் கடைசியாக அமெரிக்காவில் புளோரிடாவையும் வசிப்பிடமாகக் கொண்டிருந்தவர். அன்னார் காலஞ்சென்ற சிவசுந்தரத்தின் (மில் உரிமையாளர்) அன்பு மனைவியும், சந்திரவதனா (Canada), றோசாதேவி (சாவகச்சேரி), நேசதாஸ் (USA), காலஞ்சென்ற சுகுணலட்சுமி (குணம்) (கொழும்பு), லோகேஸ்வரி (வனஜா) (வத்தளை), விமலாதேவி (USA) ஆகியோரின் அன்புத்தாயுமாவார். அன்னாரின் பூதவுடல் இல. 2670 Dale View Dr. Jackson Villie, FL32203, USA அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 7ம் திகதி மயானத்தில் தகனக்கிரிகைகள் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், சிநேகிதர்கள், சிநேகிதிகள் அனைவருக்கும் கவலையுடன் அறியத்தருகிறோம்.

தகவல் கண்ணீர் அஞ்சலியுடன் மருமகன் K.K. பாலா,
10, பொகுண வீதி, கெரவலப்பிட்டிய, வத்தளை. Tel: 2981830

நீத்தார் நினைவுகள்

கேசரி துணையுடன் நினைவில் நிலைத்து நிற்கட்டும்

31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 09 05 1928

உதிர்வு 11 01 2009

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வவுனியாவைவதிவிடமாகவும் கொண்டிருந்த

அமரர் திரு.வேலுசெல்லப்பா

(செல்லப்பா ஸ்ரோஸ் உரிமையாளர்)

எங்கள் அன்பிற்கும் பாசத்துக்கும் பண்புக்கும் கௌரவத்துக்கும் உரிய பெருந்தகையே!

கடந்த 11.01.2009 ஞாயிறு அன்று இறைபதமடைந்த அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகளை தெரிவிப்பதோடு 10.02.2009 செவ்வாய்க்கிழமை அன்று வவுனியா இறம்பைக்குளத்திலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் தயவுடன் வேண்டிக்கொள்கிறோம்.

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தகவல்:பிள்ளைகள், இறம்பைக்குளம், வவுனியா

மரண அறிவித்தல்



நல்லையா குருநாதலிங்கம்

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 1ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது (பாரிஸ் - France) மாநகரில் வாழ்ந்து வந்தவருமான நல்லையா குருநாதலிங்கம் பரிஸில் அகால மரணமானார்.இவர் வரதீவு அமரர் நல்லையா - நல்லம்மா குடும்பத்தினரின் புதல்வனும்,புங்குடுதீவு 1ஆம் வட்டாரம் அமரர்களான செல்லையா - நல்லம்மா குடும்பத்தினரின் மருமகனும், பர்வதபத்தினி(பிள்ளை)யின் அன்புக்கணவரும், சதீஸ், தினேஸ் ஆகியோரின் அன்புத்தந்தையாரும்,திருமதி செல்வமணி (பாரிஸ்), திருமதி சுபத்திரை (கொழும்பு) ஆகியோரின் பாசமுள்ள சகோதரனும், அமரர் பரமநாதன் (புங்குடுதீவு) நாகரத்தினம் JP (கொழும்பு) ஆகியோரின் பாசமுள்ள மைத்துனரும், திருமதி பரமேஸ்வரி, திருமதி யோகேஸ்வரி, திருமதி மங்களேஸ்வரி (பாரிஸ்), திருமதி சிவனேஸ்வரி, திரு.பாலசிங்கம் (பாரிஸ்), திரு.யோகேஸ்வரன் (பாரிஸ்), திரு. தேவகுமார் (பாரிஸ்), திரு. சிவகுமார்(பாரிஸ்),திருமதி உருத்திரா (பாரிஸ்), திருமதி உதயகலா (பாரிஸ்), திருமதி உதயகுமாரி (பாரிஸ்), ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், திருமதி வசந்தகலா (பாரிஸ்), திரு. வசந்தகுமார் (பாரிஸ்), திருமதி வசந்தலதா(நோர்வே), திரு.வசந்தரூபன் (பாரிஸ்), திரு.அன்பழகன்(நோர்வே), திருமதிஅன்பரசி(பாரிஸ்), திரு.அன்புச்செல்வன் (பாரிஸ்), திரு. அன்பமுதன்(பாரிஸ்) ஆகியோரின் தாய்மாமனாரும்,அமரர்களான விசுவலிங்கம் கண்ணம்மா குடும்பத்தினரின் அன்புப்பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 09.01.2009 திங்கட்கிழமை பரிஸில் காலை 10.00 மணிக்கு நடைபெறும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல் - திருமதி நாகரத்தினம் சுபத்திரை (சகோதரி), மற்றும் மருமக்களும்.
250/4, அளுத்மாவத்தை றோட்,கொழும்பு - 15 , TP-2540819

31ஆம் நாள் நினைவஞ்சலியும் பிரார்த்தனை அழைப்பும்

திருமதி

தவமணி பூவேந்திரன்

அன்புடையீர், நிகழும் சர்வதாரி வருடம் தைத்திங்கள் 3ஆம் நாள் வெள்ளிக்கிழமை (16.01.2009) அன்று சிவனடி சேர்ந்த திருமதி தவமணி பூவேந்திரன் அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 15.02.2009 பம்பலப்பிட்டி அரச தொடர்மாடி சனசமூக நிலையத்தில் நடை பெற்று தொடர்ந்து மதிய போசன நிகழ்வும்நடைபெறும். இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்
3/2, First Lane,Ratmalana.
2605775, 0722401962,
0777340312, 0777880358